(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(17).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 யூன் 03 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 யூன் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

10/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் காணிகளை இழந்த ஆட்களுக்கு நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட வேண்டுமென்பதையும்;

(ii) ஆயினும், காணிகள் வழங்கப்பட வேண்டிய சகலருக்கும் அதன் கீழ் காணிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) 2021.12.31 ஆந் திகதி வரை நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

(iii) அதன் கீழ் 2021.12.31 ஆந் திகதி வரை காணிகள் வழங்கப்பட வேண்டிய ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்படாத ஆட்களுக்கு வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வசம் காணிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு காணிகளை வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு முறையான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

42/2022

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் கிராமங்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கைத்தொழிலும் மேற்கொள்ளப்படும் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு கைத்தொழிலிலும் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினைகள் யாவை;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களின் சந்தையினை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இன்றளவில் அலங்கார நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவை;

(iii) 2015 மற்றும் 2016ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

255/2022

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக குவைத் நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் மூடப்பட்டதன் நிமித்தம் குவைத்தில் பணிபுரிகின்ற இலங்கைத் தொழிலாளர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தூதரகத்தின் கீழுள்ள காப்பகத்திலிருந்து பதிவாகியுள்ள கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது குவைத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களை கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

575/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பொருளாதார நிலையங்களைத் தாபித்ததன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப நோக்கங்களுக்குப் புறம்பாக மேற்படி பொருளாதார நிலையங்கள் தற்போது இயங்கிவருவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் சகல பொருளாதார நிலையங்களையும் ஒரே நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1028/2022

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சமுர்த்தி அனுகூலம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது சேவையிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பாரிய சேவை ஆற்றப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொண்டுள்ள தொழில் ரீதியான பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1180/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மொத்த குடும்பங்களில் நிரந்தர வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி அதிகாரசபையினால் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள, உதவிகள் வழங்கப்பட்டுள்ள மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் உதவிகள் அளிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை திறந்து வைக்கும் போது, அதன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1195/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹொரண, வகவத்த பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட டயர் தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கான உடன்படிக்கை, இலங்கை முதலீட்டுச் சபையுடன் கைச்சாத்திடப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3290/2022

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுன்னாகம் தபால் அலுவலகம் மற்றும் தபால் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் பணிகளை நிறைவு செய்துள்ளதாக அப்போதைய யாழ்பாண மாவட்டச் செயலாளர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ள போதிலும் அந்நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதற்குரிய பெறுகைச் செயன்முறையானது குறைபாடுகளைக் கொண்டுள்ளதென தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) போதியளவு ஒதுக்கீடுகள் இல்லாமையின் காரணமாக மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தை நிறுத்தப்போவதாக தற்போதைய மாவட்டச் செயலாளரால் ஒப்பந்தக்காரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது தவறாயானது என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிர்மாணப்பணிகளை நிறைவு செய்யாததன் காரணமாக ஏற்பட்ட இழப்பீடு, முற்பணக்கொடுப்பனவில் கழிக்கப்படாத தொகை மற்றும் தாமதத்திற்காக அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தின் ஒரு பகுதி மாத்திரம் அறவிடப்பட்டமை என்பன தொடர்பில் எவ்வித அறிக்கைகளும் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றேல், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) திட்டமிட்டவாறு மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

3292/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்றிருந்த கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், வடகிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது என்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நீதிமன்ற செயற்பாடுகளை அரசாங்கக் கட்டிடமொன்றில் தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கிண்ணியா பிரதேச மக்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கென திருகோணமலை வரை செல்லும்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3336/2022

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்தில் வெள்ள நிலைமை ஏற்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் குறிப்பாக புத்தளம் நகரத்தில் இறால் பண்ணைகளும், உப்பளங்களும் பாதிக்கப்பட்டன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 யூன் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1316/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு மேலும் செலவிட வேண்டியுள்ள தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் கம்பனி யாதென்பதையும்;

(iv) கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்படி கருத்திட்டம் தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1476/2022

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக்குளங்களுள் அரசாங்கத்தின் குளங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்கால நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத குளங்களையும் துரிதமாக புனரமைப்புச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1735/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2021/2022 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இப்போகத்தில் எதிர்பார்க்கப்படும் நெல் அறுவடையின் அளவு யாதென்பதையும்;

(iii) அந்த நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக இன்றளவில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1946/2022

கௌரவ லலித் எல்லாவல,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1947/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் கல் உடைத்தல், பாரிய கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும்;

(ii) குண்டசாலை பிரதேசத்தில் திகன, ஹீப்பிட்டிய, அஹஸ்பொக்குண மற்றும் மல்பான பகுதிகளிலும், யட்டிநுவர பிரதேசத்தில் அலகல்லே, உடுநுவர பிரதேசத்தில் எழுகொட மற்றும் ஹந்தபான பகுதிகளிலும் மேற்படி கல் உடைத்தல் காரணமாக பாரியளவில் சூழல் பாதிக்கப்படுவதாக, சூழலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில், கண்டி மாவட்டத்தில் கல் உடைத்தலுக்கென வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் கல் உடைத்தல் நடைபெறுகிறதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அக்காணிகளில் கல் உடைப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) கல் உடைப்பதன் காரணமாக புழுதி, கற்சிதறல் மற்றும் பாதைகள் அழிவடைதல் போன்ற பொதுத் தொல்லைகள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை;

(ii) கல் உடைப்பதன் காரணமாக யட்டிநுவர, நாவலப்பிட்டி, உடுநுவர, குண்டசாலை போன்ற பிரதேசங்களில் நீர் ஆதாரங்கள் அழிந்துபோதல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1959/2022

கௌரவ காமினி வலேபொட,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பெருந்தோட்டக் கைத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1993/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2003/2022

கௌரவ டபிளியூ.எச்.எம் தர்மசேன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) படல்கும்புர மற்றும் புத்தல பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏழு குளங்கள் சார்ந்ததாக 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "முத்துகெலியாவ நீரேந்து கால்வாய்" கருத்திட்டத்தின் பணிகள் 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் மூலம் நேரடியாக நீர் வழங்கப்படுகின்ற விளைநிலங்களின் அளவும் பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் மூலம் நீர் வழங்கப்படவுள்ள கோங்கஹ குளம், சேருகஸ் ஆற, நாகஸ் ஆற, கரவில கனத்த, நிக்கமட குளம், இங்குரு ஆற, தம்மென்னாற ஆகிய குளங்களில் இன்றளவில் நீர் வழங்கப்பட்டுள்ள குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நீர் வழங்கப்படவுள்ள முத்துகெலியாவ, கட்டுகஹகல்கே, திக்யாய, பெட்டகம்வெல, மெதகம, வகுருவெல, கோன் கெட்டிய ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இன்றளவில் நீர் வழங்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுக்கு மத்தியில் இன்றளவில் நீர் வழங்கப்படாத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு நீர் வழங்குவதில் காணப்படுகின்ற தடைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தடைகளைப் போக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் அவை மேற்கொள்ளப்படும் திகதி என்பன யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2005/2022

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கிராமிய சக்திச் செயலகத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய முறைகேடுகள், முறையற்ற நியமனங்கள், ஊழல் செயற்பாடுகள் அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2013/2022

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015-2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தலைவரது பெயர் மற்றும் சேவைக் காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு தலைவரினதும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தலைவருக்காகவும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் இதர வசதிகள்;

(iv) மேற்படி தலைவர்களில் முழு நேரம் சேவையாற்றாத ஒவ்வொரு தலைவரினதும் பெயர் மற்றும் அந்த ஒவ்வொரு தலைவரும் இந்நிறுவனத்தில் தலைவர் பதவிக்கு மேலதிகமாக வகித்த வேறு பதவிகளின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அப்போது 677,301,677.88 ரூபாவாக காணப்பட்ட நிறுவனத்தின் நிலையான வைப்பு மீதி, 2019 ஆண்டின் இறுதியில் எவ்வளவாக காணப்பட்டது என்பதையும்;

(ii) நிலையான வைப்பு நிதி செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட நிதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களினால் நிறுவனத்திற்குக் கிடைத்த நன்மைகள் யாவை என்பதையும்;

(v) நிறுவனத்திற்கு நன்மை கிட்டவில்லையெனில், பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து மேற்படி நிதி அறவிடப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூன் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2024/2022

கௌரவ மதுர விதானகே,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிரம வாசனா நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2041/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் விசேட பணிப் பொறுப்புகள் பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2044/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(i) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கிராமங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இதுவரையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புக் கிராமங்கள் காணப்படின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வீடமைப்புக் கிராமங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நெடுஞ்சாலைகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2072/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2096/2022

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களினதும் உப டிப்போக்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு டிப்போவினதும் உப டிப்போவினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பாவனைக்குப் பொருத்தமான நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பிராந்திய உப டிப்போ, 2001 ஆம் ஆண்டில் உப டிப்போவாக்கப்பட்டதோடு மேற்படி டிப்போ இதுவரை உப டிப்போவாகவே உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்,

(ii) மேற்படி உப டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2113/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மரணமடைகின்ற நபரொருவர் சார்பில் வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) யானை-மனித மோதலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2261/2022

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை வழங்காதிருப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தீர்மானம் காரணமாக அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2457/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் வருகை தரக்கூடுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் 2022 ஆம் ஆண்டில் ஈட்டுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2467/2022

கௌரவ றோஹண திஸாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் வசமுள்ள காணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் அளவானது, அக்கம்பெனிக்குச் சொந்தமான ஒவ்வொரு தோட்ட வாரியாக யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கம்பெனி வசமுள்ள காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் பயிர்செய்கை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

# 2022 யூன் 24, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2565/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பெருந்தோட்டக் கம்பனிகளினால் இன்றளவில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் காணி உரித்து அரசாங்கத்திற்குரியதாக உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி காணிகளின் உரித்து அரசாங்கத்திடமிருந்து அகற்றப்பட்டு முழுமையாக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கின்ற போது உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(ii) குறிப்பாக, பெருந்தோட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் வீடமைப்பிற்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக அமையுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீர்செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2569/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் இருக்கும் பழக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பழக்கப்பட்ட யானைகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழக்கப்பட்ட யானைகளின் நலனுக்காக இதுவரை முறையான வேலைத்திட்டமொன்றோ அல்லது சட்ட முறைமையோ தயாரிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2579/2022

கௌரவ பீ.வை. ஜீ. ரத்னசேக்கர,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவருகின்ற நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த நீதிமன்றங்களில் இன்றளவில் விசாரணை செய்யப்பட்டுவருகின்ற வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவ்வழக்குகளுக்கென எடுக்கப்பட்டுள்ள காலம் தொடர்பில் பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) அதிக காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வழக்குகளை துரிதமாகத் தீர்ப்பதற்கு கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தடை உத்தரவுகள் தொடர்பில் துரிதமாக ஓர் இறுதியான முடிவை எட்டுவதற்கான முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) சிறு வழக்குகளை விசாரணை செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மத்தியஸ்த சபை முறையை மேலும் விஸ்தரித்து அதனை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதற்கான முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2634/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, துறைமுக நகர கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்கு இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள நேரடி மற்றும் ஏனைய வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாது;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்காக குறிப்பிட்ட கருத்திட்டத்தைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2649/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் பௌத்தம், இந்து, கத்தோலிக்கம் மற்றும் இஸ்லாம் ஆகிய சமய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, 2019.05.25 ஆம் திகதி நடத்தப்பட்ட தர்மாசிரியர் பரீட்சையில் சித்தி பெற்ற அபேட்சகர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரியர் நியமனங்களை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு தர்மாசிரியர் பரீட்சைக்குத் தோற்றிய அபேட்சகர்களுக்கு உரிய கால எல்லைக்குள் நியமனம் வழங்காததன் காரணமாக அரச சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் உச்ச வயதெல்லை கடக்கப்படுவதனால் இவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகின்றது என்பதனை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடைய அபேட்சகர்களுக்கு தாமதமின்றி நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2654/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகையில் பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி தொழில்களுக்கான கடமையின் தன்மை யாதென்பதையும்;

(v) மேற்படி தொழில்பெறுநர்கள் இணைக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2689/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "நில செவன" எனும் கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் "நில செவன" அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளும், பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி "நில செவன"அலுவலகங்களும் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும், பிரதேச செயலகப் பிரிவும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2750/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 7 பஸ் டிப்போக்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், மேற்படி டிப்போக்களில் காணப்படும் பேரூந்துகளின் பற்றாக்குறை மற்றும் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக மாகாண மக்களுக்கு உரிய சேவையை வழங்க இயலாதுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய நிறுவனங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) குறிப்பிட்ட சில இடங்களுக்கு போக்குவரத்துச் சேவைகள் இல்லாததால் அதிக செலவில் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், எதிர்வரும் காலத்தில் வடமாகாண மக்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2771/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (சார்க்-SAARC) கொழும்பு சமவாயம் மற்றும் 16 ஆவது மாநாட்டு அமர்வின் பிரகாரம் 8000 மெ.தொ. விசேட அரிசி இருப்பு ஒன்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 100,000 மெ.தொ. அரிசி காப்பு இருப்பு ஒன்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியங்களில் பேணவரப்பட வேண்டியது அத் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அரிசி இருப்புக்கமைய பேணிவரப்பட்ட அரிசிக் கையிருப்பின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட இருப்புக்களில் பேணிவரப்பட வேண்டிய அரிசிக் கையிருப்புகள் உரியவாறு பேணப்பட்டனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட இருப்புகளுக்கென உரியவாறு அரிசிக் கையிருப்புகள் பேணப்படாத காரணத்தினால் மேற்படி இருப்புகளை உருவாக்கியதன் நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3055/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேதனப் பசளையை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நெல் அறுவடையானது பாரியளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு மாவட்ட வாரியாக இது வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) நட்டஈடு வழங்குகையில் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?